இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 208 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – மாசி 26 – செவ்வாய்க்கிழமை 10 மார்ச் 2026 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 208 : Thiruvalluvar Year - 2057 - Maasi 26 - Tuesday 10 March 2026 - Chennai 16 Pages ₹ 5.00


## திருச்சியின் எழுச்சி தமிழ்நாடெங்கும் பரவட்டும்!

# ‘திராவிட மாடல்’ நல்லாட்சி தொடரட்டும் ! தமிழ்நாடு வெல்லட்டும் !

## திருச்சியில் திரண்ட லட்சோப லட்சம் தீரர்களிடையே தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சி முழக்கம்!

**திருச்சி, மார்ச் 10**

**‘திருச்சியின் எழுச்சி தமிழ்நாடெங்கும் பரவட்டும்!’ என்றும், ‘திராவிட மாடல்’ நல்லாட்சி தொடரட்டும்; ‘தமிழ்நாடு வெல்லட்டும்!’ எனவும் திருச்சியில் திரண்ட லட்சோப லட்சம் கழகத் தீரர்களிடையே தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுச்சி முழக்கமிட்டார்.**

**கழகத் தலைவரும், முதலமைச்சரு மான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (09-03-2026) திருச்சி சிறுகனூரில் நடைபெற்ற ‘ஸ்டாலின் தொடரட்டும் - தமிழ்நாடு வெல்லட்டும்’ கழகத்தின் 12-ஆவது மாநில மாநாட்டில் கலந்து கொண்டு ஆற்றிய எழுச்சியுரை வருமாறு:-**

எல்லாச் சாலைகளும், திருச்சியை நோக்கி! எல்லாத் திசைகளும், திருச்சியை நோக்கி! எல்லா மக்களும், திருச்சியை நோக்கி! திரும்பும் திசை எல்லாம், கருப்பு சிவப்பு! திரும்பும் திசை எல்லாம், அண்ணாவின் தம்பிகள்! திரும்பும் திசை எல்லாம், கலைஞரின் உடன்பிறப்புகள்! தெற்கே குமரியில் இருந்து வடக்கே கும்மிடிப்பூண்டி வரை, தமிழ்நாடே இந்தச் சிறுகனூரில் திரண்டு, சிறுகனூர் பெருகனூராக ஆகியிருக்கிறது.







**கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.3.2026) திருச்சிராப்பள்ளி, சிறுகனூரில் நடைபெற்ற, கழக நிர்வாகிகள் சந்திப்பு மாபெரும் மாநில மாநாட்டில் கலந்துகொண்டு, உரையாற்றினார். இம்மாநாட்டில், கழகப் பொருளாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு, கழக முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இளைஞரணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், துணைப் பொதுச் செயலாளர்கள் - ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, சட்டமன்ற உறுப்பினர் முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் - திருமதி கனிமொழி கருணாநிதி, திருச்சி சிவா, ஆ.ராசா, அந்தியூர் செல்வராஜ், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், அமைச்சர் பெருமக்கள், முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.**

### தி.மு.க.வின் பெரும் சேனை திருச்சியில் திரண்டிருக்கிறது!

எதிரிகளால் வீழ்த்த முடியாத திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெரும் சேனை இங்கு திரண்டிருக்கிறது. இந்தச் சேனையின் தலைமைத் தொண்டனான இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் அழைப்பை ஏற்று வந்திருக்கும், தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளே! உங்கள் அனைவருக்கும் என்னுடைய முதல் வணக்கம்!

வரவேற்புரை ஆற்றிய மாநாட்டின் தலைவர், கழக முதன்மைச் செயலாளர் என்னுடைய ஆருயிர் சகோதரர் கே.என். நேரு அவர்களே!

உடல்நிலை காரணமாக இங்கு வர முடியவில்லையென்றாலும், தொலைக்காட்சியில் இந்த மாநாட்டைப் பார்த்துக் கொண்டிருக்கும் கழகப் பொதுச் செயலாளர் என்னுடைய ஆருயிர் அண்ணன் துரைமுருகன் அவர்களே!

கழக பொருளாளர் அருமைச் சகோதரர் டி.ஆர். பாலு அவர்களே!

துணைப் பொதுச்செயலாளர்கள்:

ஐ. பெரியசாமி அவர்களே,

முனைவர் பொன்முடி அவர்களே,

என்னுடைய அன்புத் தங்கை கனிமொழி கருணாநிதி அவர்களே,

திருச்சி சிவா அவர்களே,

ஆ. இராசா அவர்களே,

அந்தியூர் செல்வராஜ் அவர்களே,

மு.பெ. சாமிநாதன் அவர்களே!

இளைஞரணிச் செயலாளர் தம்பி உதயநிதி உள்ளிட்ட அனைத்து அணிகளின் செயலாளர்களே, பொறுப்பாளர்களே!

தலைமைக் கழக நிர்வாகிகளே!

ஆற்றல்மிக்க மாவட்டக் கழகச் செயலாளர்களே!

சட்டமன்ற, நாடாளுமன்ற முன்னாள் - இந்நாள் உறுப்பினர்களே!

அன்புச் சகோதரர் முன்னாள் முதல்வர் ஓ.பி.எஸ் அவர்களே!

உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!

இந்த மாநாட்டிற்காக இரவு பகலாக உழைத்த ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டக் கழக நிர்வாகிகளே!

உங்கள் அனைவருக்கும் என் மாலை வணக்கம்!

### தொடர்ந்து மாநாடுகள் நடத்தி தேர்தல் பணியைத் தொடங்கியுள்ளோம்!

கடந்த மூன்று மாதங்களாக நாம் நடத்துவது மாநாடுகள்தான்! தம்பி உதயநிதி அவர்கள் மண்டல வாரியாக நடத்திய, இளைஞரணி நிர்வாகிகள் சந்திப்பு மாநாடுகள்; என்னுடைய அன்புத் தங்கை கனிமொழி அவர்கள் நடத்திய மகளிரணியின் வெல்லும் தமிழ்ப்பெண்கள் மாநாடுகள்; சென்னை - மதுரை - கோவை - திருப்பத்தூர் என மண்டல அளவில் நடத்தப்பட்ட பூத் நிர்வாகிகள் பயிற்சி மாநாடுகள் என்று இலட்சக்கணக்கான நிர்வாகிகளை அழைத்து மாநாடுகள் நடத்தி, தேர்தலுக்கான பணிகளைத் தொடங்கினோம்! அதற்கெல்லாம் உச்சமாக இன்று பத்து லட்சம் பேர் பங்கெடுத்திருக்கும் பெரிதினும் பெரிய மாநாடாகத் திருச்சியில் இந்த மாநில மாநாடு நடந்து கொண்டிருக்கிறது!

இங்கு நான் வந்தபோது மாநாட்டின் நுழைவாயிலிலிருந்து, மேடை வரும் வரைக்கும் நீங்கள் எனக்குக் கொடுத்த வரவேற்பு அட... அட... அட... உங்கள் முகத்தில் பார்த்த அந்த மகிழ்ச்சி இருக்கிறதே, என்னுடைய வயதைக் குறைந்திருக்கிறது! அந்த தெம்போடு நிற்கிறேன். கடந்த வாரம் என்னுடைய பிறந்தநாளுக்குத் தொலைபேசியில் எனக்கு மற்ற மாநிலத் தலைவர்கள் அனைவரும் வாழ்த்து சொன்னபோது, என்னுடைய வயதை நம்ப முடியவில்லை என்று சொன்னார்கள். இந்த மாதிரி என்னை இளமையாக வைத்திருக்கக் காரணமே நீங்கள் தான்! உங்கள் அன்புதான்!

### நம்மிடையே 75 ஆண்டுகளாக தொடரும் பந்த, பாசப் பிணைப்பு!

ஆன்மீக நண்பர்கள் சொல்வார்கள், “என்ன தவம் செய்தனை”. அது போன்று, உங்களை எல்லாம் உடன்பிறப்புகளாகப் பெற, நான் என்ன தவம் செய்தேனோ! கோடிக்கணக்கான உடன்பிறப்புகளின் தலைமைத் தொண்டனாக என்னைத் தேர்ந்தெடுத்தது நீங்கள்தான்! இந்தத் தாய்த்தமிழ்நாட்டின் முதலமைச்சராக நான் பொறுப்பேற்க காரணமும் நீங்கள் தான்! உங்களால்தான் நான் வளர்ந்தேன்! உங்களால்தான் நான் உயர்ந்தேன்! உங்களுக்காகத்தான் நான் வாழ்கிறேன்! இந்தப் பாசப்பிணைப்பு - உடன்பிறப்புகள் என்ற இந்த உயிர்த்துடிப்பு - இதெல்லாம் இன்றைக்கு நேற்று ஏற்பட்ட பந்தமா? திராவிட முன்னேற்றக் கழகம் உருவான காலம்தொட்டு, 75 ஆண்டுகளாகத் தொடரும் அன்பு இது!

பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும், அவர் வழிவந்த நானும் இந்தப் பாச உணர்வைத்தான் உங்களிடம் பார்க்கிறோம். கழக வரலாற்றில் எத்தனையோ திருப்புமுனை களுக்கு அடித்தளமிட்ட, தீரர்கள் கோட்டமாம் திருச்சியில் இந்த மாநில மாநாட்டை நடத்துகிறோம்!

இந்த மாநாடு எதற்கு என்று நிறைய பேர் கேட்கிறார்கள்! ஒரு கிரிக்கெட்டில், முதல் பந்தில் இருந்தே ரன் அடிப்பது முக்கியம்தான்... அதேசமயம், இறுதி ஓவர்களில் அடித்து ஆடி, கடைசி பந்தில் வின்னிங் ஷாட்டாக சிக்ஸர் அடித்து ஜெயிப்பதுதான் ஒரு கிராண்ட் ஃபினிஷிங்காக இருக்கும்! அப்படிப்பட்ட வெற்றியை, 2026-இல் நாம் பெறுவதற்குதான் இந்த மாநாடு!

### ஆருயிர் சகோதரர் கே.என்.நேருவுக்கு பாராட்டுகள்!

அதற்காகத்தான், இந்த மாபெரும் மாநில மாநாட்டை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கிறார், நம்முடைய அமைச்சர் ஆருயிர் சகோதரர் திருச்சியின் தீரர் கே.என்.நேரு அவர்கள்! முதலில் தலைவராக, அவருக்கு என்னுடைய சார்பிலும், மேடையில் இருக்கும் தலைமைக் கழகத்தின் நிர்வாகிகள் சார்பிலும்,


**தொடர்ச்சி 4–ஆம் பக்கம்**


---



## மாநாடு என்றால் நேரு! நேரு என்றால் மாநாடு!

**நம்முடைய நேருவிடம் மாநாடு என்று சொல்லிவிட்டாலே போதும்! அவருக்குள் ஒரு புது எனர்ஜி வந்துவிடும். நாம் நினைப்பதை விட, எப்போதும் பிரம்மாண்டமாக நடத்துவதுதான் நேருவின் ஸ்டைல்! அதனால்தான் நான் எப்போதும் சொல்வது... மாநாடு என்றால் நேரு! நேரு என்றால் மாநாடு! இப்போது கூட பாருங்கள்... 200 ஏக்கர் இடத்தைத் தேர்ந்தெடுத்து, 200 இடங்களை வெல்ல வேண்டும் என்று குறிப்பால் தொண்டர்களுக்குச் சொல்லிவிட்டார்! நமக்கான இடத்தைத் தயார் செய்து கொடுத்து விட்டார். இனிமேல் தொடர்ந்து நாம் அடித்து ஆட வேண்டும். இந்த மாபெரும் மாநாட்டிற்காக அயராது உழைத்த அவருக்கும், அவருக்குத் துணை நின்ற ஒருங்கிணைந்த திருச்சி மாவட்ட நிர்வாகிகளுக்கும், என்னுடைய பாராட்டுகள்! வாழ்த்துகள்!**

---

## இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினும் – தி.மு.க.வும் இருக்கும் வரை பா.ஜ.க.வால் தமிழ்நாட்டை ஆள முடியாது!